**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15.08.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 76வது சுதந்திர விழாவினை முன்னிட்டு "சுதந்திர வனம்"**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் உள்ள தாவரவியல் பூங்காவில் 76வது சுதந்திர விழாவினை முன்னிட்டு அரிய மர வகைகளுடன் கூடிய "சுதந்திர வனம்" 15.08.2022 அன்று அமைக்கப்பட்டது.

முனைவர். வெ. கீதாலட்சுமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் மாநில மரமான "பனை" மரத்தின் விதையினை நடவு செய்து சுதந்திர வனத்தினை துவங்கி வைத்தார்கள். இத்துடன் சுற்றுச் சூழல் ஆர்வலர் திரு. எம். யோகநாதன் அவர்களுடன் நமது "தேச தந்தை மகாத்மா காந்தி" அவர்கள் நடவு செய்த நாவல் மர சந்ததியிலிருந்து தருவித்த நாவல் மரக்கன்றினை நடவு செய்தார்கள். இவ்விழாவினை சிறப்பிக்கும் விதமாக பறவைகள் மற்றும் தேனீகள் ஈர்க்கும 76 அரிய வகையான மரங்களை பல்கலைக்கழக முதன்மையர்கள், இயக்குநர்கள், விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்கள் நடவு செய்தனர்.

மேலும், பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் 20 வகையான ரோஜாக்களைக் கொண்ட 'ரோஜா' தோட்டத்தினை துவங்கி வைத்தார்கள். சுதந்திர வனம் மற்றும் ரோஜா தோட்டத்தினை இயற்கை ஆர்வளர்கள், தாவரவியலாளர்கள், விஞ்ஞானிகள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. இந்த மர நடும் விழாவினை முனைவர். பெ. ஐரின் வேதமணி முதன்மையர் (தோட்டக்கலை) மற்றும் முனைவர் க. இராஜாமணி, பேராசிரியர் மற்றும் தலைவர், மலரியல் மற்றும் நில எழிலூட்டும் துறை ஏற்பாடு செய்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**